Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924

வருட சந்தா ரூ 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 17 } ஈரோடு, 12-8-1944 ஆடி-மீ 28உ { மலர் 44

சென்னை 5-வது சுயமரியாதை மாநாடு

தோழர் கனகம்மையார் சொற்பொழிவு

சென்னையில் 30-7-44 ஆந்தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சென்னை 5-வது சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்த தோழர் கனகம்மையார் (சேலம் கல்லூரி தலைவர் தோழர் எ. ராமசாமிக் கவுண்டர் அவர்கள் மனைவியார்) அவர்களின் திறப்புவிழா சொற்பொழிவு:—

தமிழ் நாட்டுத் தனிப்பெருந்தலைவராகிய பெரியார் அவர்களே, சகோதரிகளே, சகோதரர்களே!, வணக்கம்.

இம்மாநாட்டினைத் திறந்து வைத்தற்குரிய அறிவோ, ஆற்றலோ, தகுதியோ எனக்கு இல்லை என்பதை நான் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். அப்படியிருந்தும் இம்மாநாட்டைத் திறந்துவைக்கும்படி நீங்கள் என்னை அழைத்தீர்கள், நானும் அதற்கு இசைந்தேன். எந்தக் காரணங்களைக் கொண்டு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களோ அது எனக்குத் தெரியாது. ஆனால் பெரியார் அவர்களின் கட்டளையை மறுப்பதற்குப் போதிய தைரியமில்லாத ஒரே காரணத்தால்தான் இந்தப்பணியை நான் ஏற்றுக்கொண்டேன். நானும் இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை எனக்களித்த இம்மாநாட்டாருக்கு எனது நன்றி உரியதாகுக.

இந்த இயக்கத்தில் வெளிப்படையாக இதுவரையிலும் நான் கலந்துகொள்ளவில்லையெனினும் நான் ஒரு உணர்ச்சியிருந்த சுயமரியாதைக்காரியாகவே வாழ்ந்து வருகிறேன் என்பதை உங்கட்குப் பெருமையுடனும், பணிவுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். சுயமரியாதை என்பது தன்மானம் எனப் பொருள்படும். தனது நிலையினின்று தாழாமையும் தாழ்ந்தக்கால் உயிர் வாழாமையுமே மானம் எனப்படும். இந்த அருமையான பண்பு தமிழர்களுக்கே உரித்தாயதென்பது பண்டைய சங்க நூல்களின் வாயிலாகத் தெரியக்கிடக்கின்றது. பண்டைய காலத்துத் தமிழர்கள் தமது உயிரைக்காட்டிலும் மானத்தையே சிறந்ததெனக் காத்து வந்தனர்.

மயிர்நீப்பின் உயிர்வாழாக்
கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானங்கெடின்

என்ற குறள் ஒன்றே பண்டைத் தமிழரது தன்மான உணர்ச்சியைக் காட்டுகிறதல்லவா? இதனாற்றான் சுயமரியாதை இயக்கம் என்பதைவிடத் தன்மான இயக்கம் அல்லது தமிழர் இயக்கம் எனக் கூறுவதே சாலச் சிறந்தது என்பது எனது கருத்தாகும்.

தமிழர் மானம் மறைந்ததேன்?

தமிழரது இயற்கைப் பண்பாகிய மானம் இடைக்காலத்தில் குறைந்து மறைந்து போனதற்கு முக்கியமான காரணம் ஆரிய ஆதிக்கமேயாகும். ஆரியர்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழ்நாட்டில் பெருவாரியாகக் குடியேறித் தமிழரைப் பல துறையிலும் தந்திரத்தால் அடிமையாக்கினர். தமிழ் மன்னரைத் தம் வசப்படுத்தி அவர்கள் மூலமாக மக்களை அடிமைகளாக்கி ஆரிய மதத்தைப் பரப்பித் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டனர். தமிழரது உயர்ந்த மதத்தினையும், கலைகளையும், நூல்களையும் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துக் கொண்டு முதல் நூல்களைக் கட்டுப்பாட்டுடன் அழித்துவிட்டனர். அந்தக் கட்டுப்பாட்டாலும், சூழ்ச்சியாலும் அழிக்க முடியாத சில தமிழ் நூல்களுக்குத் தமது கொள்கைகளையே வலியப் புகுத்தி உரை செய்தனர். இன்று காணப்படும் தொல்காப்பிய உரைகளும், திருக்குறள் உரைகளும் ஆரியமயமாக இருப்பதற்கு இதுவே காரணமாகும். தமிழ் மொழியைத் தாழ்த்தியும் ஆரியமொழியைத் தேவமொழி என உயர்த்தியும் விஷமப்பிரசாரம் செய்து செய்து வெற்றியடைந்தனர். ஆலயங்களிலும் திருமணங்களிலும் ஆரிய மந்திரத்தைப் புகுத்தித் தாமே முதன்மைப் பெற்றனர். ஜப்பானியர்கள் பர்மாவில் செய்தது போலவே தமிழரது முக்கிய நகரங்களுக்கும், தெய்வங்களுக்கும் சமஸ்கிருத பெயர் தந்து அவற்றை ஆரிய சரக்குப்போலக் காட்டி விட்டனர். சாதிகள் பலவற்றை உண்டாக்கி சாதிக்கொரு நீதியும் செய்து தமிழரைப் பிரித்துத் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டனர். தமிழ்மக்களை சூத்திரர், தஸ்யூக்கள், ராட்சதர்கள் என்றும், தமிழர்கள் உழைக்கப் பிறந்தவர், ஆரியரோ ஆளப்பிறந்தவர் என்றும் கூறுகின்ற புராணங்களையும், இதிகாசங்களையும் உண்டாக்கித் தமிழர்களைப் பல துறையிலும் அடிமையாக்கினர்.

வீரத்தமிழன் சோர்ந்து அடிமையானான். மதியிழந்தான், மொழியிழந்தான், மானம் இழந்தான், மாண்பிழந்தான், வீரம் இழந்தான், இன்னோரன்ன பழந்தனம் அனைத்தையும் இழந்தனன். தமிழனுக்கு இனி ஒரு கதியில்லையோ என்று அறிஞர்கள் வாடியிருக்கையில் பெரியார் அவர்கள் தக்க காலத்தில் தமிழ் நாட்டின் தவப்புதல்வர் எனத் தோன்றினார்.

விடாமுயற்சியுடன் தமக்கு நேர்ந்த இடையூறுக்கிடையூறாய் நின்று பசிநோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாக உழைத்ததின் பயனாகத் தமிழ் மக்கள் இன்று விழித்துக் கொண்டனர். அவரை அன்று எதிர்த்தவர்களே இன்று துதிக்கின்றனர்; அன்று இகழ்ந்தவரும் இன்று புகழ்கின்றனர். முன்னர் தூற்றினோர் பின்னர் போற்றினர். நமது தலைவரின் பெருமையே பெருமை. தமது உழைப்பின் பலனைத் தமது வாழ்நாளிலேயே தாமே நேரில் கண்டு மகிழ்ந்த தலைவர் உலகச் சரித்திரத்தில் ஒருவர் உண்டெனின் அவர் தான் நமது பெரியார் ஈ. வெ. ரா. என்பேன். இவரை வாழ்த்தாத எவனும் உண்மையான தமிழ் மகன் ஆகமாட்டான். பெரியார் அவர்கள் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ள நலத்தினைப் போற்றாத தமிழன் ஒருவன் இருப்பானேல் அவன் செய்ந்நன்றி கொன்றவனாவான்.

பெரியார் செய்த செய்கைகள்

அவர் செய்த செயற்கரிய செய்கைகள் யாவையெனின் சில சொல்லுவேன்: இந்நாட்டு மக்களைக் கண்விழிக்கச் செய்தார். திருமணத்தில் தமிழ் மணமே வீசச்செய்தார். கோயில்களில்

தீண்டாதார் நுழையச் செய்தார். கட்டாய இந்தியினை வெட்டி மாய்த்தார். நமக்கிருந்த சூத்திரப் பட்டம் தொலையச் செய்தார். ரயில்வே உணவுச்சாலைகளில் இருந்து வந்த இழிவினை ஒழியச் செய்தார். இன்னும் பல செயலாற்றி வருகின்றார். இதைக்காட்டிலும் அதிக சேவையை வேறு யார்தான் செய்து விட்டார்கள்? தமிழ் மக்கள் வீரர்களாக வாழவேண்டுமானால், சிங்கம் போல் தமிழர்கள் அடிமை வாழ்வினின்றும் நீங்கிச் சுதந்தரத்துடன் வாழவேண்டுமானால், தமிழ்த்தாயை அரியாசனத்திருத்தி மகிழ்விக்கவேண்டுமானால், தமிழ் நாட்டைத்தனி நாடாக்கவேண்டுமானால், தமிழர் சீரும் சிறப்புடன் வாழ வேண்டுமானால், சுயமரியாதை இயக்கத்தைத் தவிர வேறு புகல் எது? அன்பர்களே ஆராய்ந்து பாருங்கள்.

சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கத்தால் உறங்கிக் கிடந்த தமிழர்கள் விழித்துக்கொண்டு தமது அடிமைத்தனத்தை ஒழிக்க முன்வந்துள்ளார் என்னும் உண்மை எவராலும் மறுக்க முடியாது, யாராலும் மறைக்க முடியாது, நம்மனோரால் மறக்கவும் முடியாது. அப்படியிருந்தும் இந்த இயக்கம் ஒரு கூட்டத்தாரால் தூற்றப்படுவதும், பழிக்கப்படுவதும் உங்களுக்குத் தெரிந்த விஷயமே. இந்த இயக்கத்தால் பெரிதும் பாதிக்கப்படுவோர்களாகிய ஆரியர்களும் அவர்களுடைய கங்காணிகளும் நமது கொள்கைகளைத் திரித்தும், பழித்தும் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். சுயமரியாதை இயக்கமென்பது கடவுளே இல்லை என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது எனவும்; சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகம் பேசிப் பேசி நாத்தழும்பேறிய கூட்டத்தவர் எனவும் அவர்கள் பறைசாற்றித் திரிகின்றனர். இது ஒரு வீண் புரளியேயாகும். கடவுளைப் பற்றி சுயமரியாதைக்காரர்கள் கவலைப்படுவதில்லையென்பது உண்மையே. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் அறிவின் வடிவாக அமர்ந்திருக்கும் கடவுளையோ அல்லது அவரிடம் வைக்கும் இடைவிடாத தூய சக்தியையோ சுயமரியாதைக்காரர் எப்போதும் கண்டித்ததே இல்லை. ஆனால் கடவுளையோ அல்லது போலிப் பக்தியையோ கருவிகளாகக் கொண்டு பிறரை ஏய்த்துப் பொருள் பறிக்கும் திருவிளையாடல்களைத் தான் சுயமரியாதைக்காரர்கள் கண்டித்து வருகிறார்கள். மனைவி மக்களுடன் கோவில்களில் எழுந்தருளி, வைரம் இழைத்த நகைகள் பூண்டு பட்டாடையுடுத்தித் தங்க வாகனங்களில் மனிதரது தோள்களில் ஏறிக் கோலம் வருகின்ற கடவுள்கள் உண்மைக் கடவுளாகமாட்டா. அவை எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் ஒரு கூட்டத்தாரின் அலங்காரப் பொம்மைகள் என்று சொல்வதில் தப்பென்ன? ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உறுதியும் தனக்கென வாழாது பிறர்க்கெனவாழும் பண்பும் வாய்ந்த தூய உள்ளமே உண்மைக் கடவுளின் கோயிலாகும் என்பது தான் பண்டைக்காலத்துத் தமிழரது கொள்கை. அதனைத்தான் சுயமரியாதைக்காரர்களும் சொல்லுகிறார்கள். பகுத்தறிவுக்குப் பொருந்தாதனதையும் தன்மானத்துக்குக் கேடு பயப்பதனையும் செய்யாதே என்றுதான் சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இந்த அறிவுரைகளைக் கூறுவதனால் இவ்வியக்கத்தார்க்குப் பிராமணத்துவேஷிகள் என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. பிராமணர்கள் மீது நமக்கு எள்ளளவேனும் வெறுப்போ, துவேஷமோ கிடையாது. ஆனால், பிராமணியத்தின் கொடுமைகளைத் தொலைப்பதே நமது கருமமும் தருமமும் ஆகும். கொசு வலைக்குள் தூங்குவது எப்படி கொசுத்துவேஷம் ஆகாதோ அதைப்போலவே அடிமைத்தனத்தையகற்றுவது ஆரியத்துவேஷம் ஆகாது. புத்தரையும், மகாவீரரையும் நாத்திகர் என்றும் அவர்களுடைய மதங்கள் கடவுளற்ற மதங்கள் எனவும் கூறிக் கூறி அம்மதங்களைப் பிறந்த நாட்டிலிருந்து ஓட்டிய ஆரிய சகோதரர்கள் இன்றைக்கு சுயமரியாதை இயக்கத்தையும் அதே தந்திரத்தால் எதிர்த்து வருகின்றனர். ஆனால் கால பலத்தால் வெற்றி நமக்கே என்பதைக் காட்டும் அறிகுறிகள் பெருகிக் கொண்டே வருகின்றன.

நாஸ்திக இயக்கமா?

தமிழர்களே! சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம் என்றெண்ணி அதை வெறுக்காதீர்கள். எனக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையுண்டு. என்னைக் காட்டிலும் அதிக நம்பிக்கையுடையவர் எனது கணவர்; அப்படியிருந்தும் இந்த இயக்கம் எங்களுக்கும் இடந்தருகிறது. நாங்களும் இவ்வியக்கத்தில் கலந்து கொள்கின்றோம். எனவே இந்த இயக்கம் நாஸ்திக இயக்கம் ஆகுமா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். விஷமிகளின் வார்த்தைகளைக் கேட்டு அமுதத்தை நஞ்செனத் தள்ளாதீர்கள். வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவதாக ஓர் வீண் பழி நம்மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. இந்தப் பழியில் கடுகளவாவது உண்மையோ அல்லது நேர்மையோ இல்லவே இல்லை.

மனிதர்க்குள் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கும் வருணாசிரமத்தருமம் இருக்கும் வரையில் வகுப்புத்துவேஷம் இருந்தே தீரும். ஒரு சாதி தீண்டப்படாதது, ஒரு சாதி பார்க்கப்படாதது, ஒரு சாதி தெய்வீகம் வாய்ந்தது, ஒரு சாதி ஆளப்பிறந்தது, ஒரு சாதி உழைக்கப் பிறந்தது என்றெல்லாம் கூறுகின்ற சாஸ்திரமும் அந்தச் சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்ற சமூகமும் இருக்கிற வரையிலும் வகுப்புத்துவேஷம் இருந்தே தீரும் அல்லவா? வகுப்புச் சண்டை இன்றோ நேற்றோ உண்டானதல்ல. ஆரியர்கள் தங்களது வருணாசிரமத் தருமத்தை எப்போது இந்நாட்டில் புகுத்தினார்களோ அப்போதே வகுப்புச்சண்டையும் தொடங்கி விட்டது. இராமாயணம் வகுப்புச்சண்டை தானே. பௌத்த தர்மமும், ஜைன மதமும் வருணாசிரமக் கொடுமையினை ஒழிக்க வந்த இயக்கங்கள் அல்லவா? சாதித்துவேஷம் கூடாது என்றால் சாதிகளையே ஒழிக்கவேண்டுவதுதான் முறை.

ஜாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்று நாம் கூறுகிறோம். எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும் எனப் பிரசாரம் செய்கிறோம். ஹிட்லர் இனச் செருக்கால் அழிந்தான்; யூதர்கள் தமது ஜாதித்திமிரால் ஜர்மனியின்றும் துரத்தப்பட்டார்கள். இனச்செருக்கும், ஜாதித் திமிரும் நாசத்திற்குக் காரணங்களாக முடிகின்றன. ஆதலால் இங்கே ஜாதிகள் வேண்டாம்; இனச்செருக்கும்வேண்டாம் எனச் சொல்லுகிறோம். இது ஜாதித் துவேஷம் ஆகுமா? சிந்தித்துப் பாருங்கள். மேலும்,

நம்மை யார் வகுப்புத் துவேஷிகள் என்று பழிக்கின்றனரோ அவர்களே வகுப்புத் துவேஷிகள் என்பதற்குச் சில சான்றுகள் கூற விரும்புகின்றேன்.

யார் வகுப்புத் துவேஷிகள்

திருவண்ணாமலை கோயிலில் இந்துக்கள் எல்லோரும் சமத்துவமாகச் சென்று தரிசிக்கலாம். ஆரியர்கள், திராவிடர்கள் என்ற வேற்றுமை கடவுள் சந்நிதானத்தில் விலக்கத்தக்கது எனத் தர்மகர்த்தாக்கள் தீர்மானித்தனர். அதை எதிர்த்துப் போராடியவர்கள் தான் நம்மை வகுப்புத் துவேஷிகள் என அழைக்கின்றனர். திருவையாற்றுக் கல்லூரியின் இலவச ஹாஸ்டலில் எல்லா மாணவர்களும் சமமாக ஒரே பந்தியில் அமர்ந்து உண்ணவேண்டும் என்ற உத்தரவு போட்டதும் எழுந்தது எதிர்ப்பு, கிளம்பியது கூச்சல். அதைப் பலமாகக் கண்டித்தவர்கள் யாரோ அவர்கள் தான் நம்மை வகுப்புத் துவேஷிகள் எனப் பழிக்கின்றனர். கோட்டான் ஆந்தையைப் பழிக்கலாமா?

வகுப்பு வேற்றுமை அவசியம் வேண்டும். அது கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது ('சாதுர் வருணியம்மயா சிருஷ்டா') அதாவது, 'வருணம் நான்கை

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு

வைத்திய வள்ளல் ஈ. வெ. கி. அவர்களின் வரவேற்புரை

ஈரோட்டில் 5, 6-8-44 தேதி மகாஜன உயர்நிலைப்பள்ளி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாட்டில் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை:—

எனது அன்பார்ந்த வைத்திய சகோதரர்களே! உங்கள் வரவு நல்வரவாக விழைகிறேன்!

நமது சித்தவைத்தியமானது மற்றெல்லா வைத்தியங்களைவிட மூத்தினதாகும். எப்படியெனில், ஆரியர்கள் இந்நாட்டில் வருவதற்கு முன்பிருந்தே நம் நாட்டில் சித்த வைத்தியம் இருந்து வந்தது. அதாவது, ஆரியர்கள் இந்நாட்டிற்கு எப்போது? எங்கிருந்து? வந்தார்களென்பதும், அவர்கள் இங்கு வந்து குடியேறிய பிறகுதான், நம்நாட்டு சித்த வைத்தியத்தையும், பிற நாகரீகங்களையும் பார்த்து, தமக்கென நாகரீகங்களுக்கு வேண்டிய நூல்களையும், வைத்திய நூல்களையும் இயற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்பதும் அவர்கள் சரித்திரங்களைப் பார்க்கும்போது அறிந்து கொள்ளலாம். யூனானி வைத்தியம், மகம்மதியர் இந்நாட்டில் வந்தது எப்பொழுது என்பதைப் பார்த்தால், அவர்களுடைய வைத்திய நூல் எப்போது நம்நாட்டில் பரவத் தலைப்பட்டதென்பதும் தெற்றென விளங்கிவிடும். அதுபோலவே ஆங்கில வைத்தியமும் அவர்கள் இங்கு வந்த சுமார் 300 வருடங்களுக்குள்ளாகவேதான் நம் நாட்டில் பரவியிருக்க வேண்டும். ஆதலால் நமது சித்த வைத்தியமே நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவந்ததாகத் தெரிய வருகிறது.

சமீபத்தில் கொண்டு வந்து நுழைக்கப்பட்ட ஆங்கில வைத்தியமானது இன்று, இந்நாட்டில் காட்டுத்தீபோல் பரவி முற்போக்கடைந்து, மிகப்பழமையான சித்தவைத்திய மென்பதை பேர் கூட சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலைமையில் கொண்டு வந்து விட்டது. இதன் காரணம் என்ன? என்று சிந்தித்துப்பார்த்தால், நமது பிற்போக்குக்கும், நமது கலை அடைந்திருக்கும் இழிநிலையும் நமக்கு நாட்டுப்பற்றும், கலைப்பற்றும் நாளுக்குநாள் குறைந்து வந்ததுமே என்பது புலனாகும். மிக, இத்தகைய மிக மிகப் பழமையானதும், மற்றெல்லா வைத்தியங்களைவிட மூத்[illegible]

[illegible]

[illegible]பதற்கும், வந்தால் எளிதில் நீக்கிக் கொள்ளவும், ஆயுளை வளர்த்திக்கொள்ளவும் தகுதியுடையதாக அமைந்திருக்கிறதுடன், நோய்க்குத் தக்கபடியான மருந்துகள் நம் நாட்டிலேயே எளிதில் கிடைக்கக்கூடியதாக எல்லா வகை செடி, கொடி, மரம், பூ, காய், கனி, விதை, பட்டை, வேர், பால், பிசின் மற்ற மண், கல், ஓடு, செங்கல் சிட்டம், உலோகம், உயிர்ப்பொருள்களின் மலம், ஜலம், மாமிசம், இரத்தம், கொம்புகள், பற்கள், தோல்கள், சிறகுகள், உரோமங்கள், எலும்புகள், குழம்புகள் முதலிய எல்லாப் பொருள்களும், கடல் நீர், ஆற்று நீர், ஊற்று நீர், கிணற்று நீர், ஏரி நீர், நண்டுவளையில் இருக்கும் நீர், பாறையில் தங்கியிருக்கும் நீர், குட்டை நீர் இப்படியாக ஒவ்வொன்றும், ஒவ்வொரு மருந்துக்கும் தனித்தனியாகவோ, கூட்டுச்சரக்காகவோ நமது வைத்தியத்திற்கு உதவக்கூடியதாக அமைந்து கிடக்கிறது. மருந்துக்கு உதவாதது என்பது இந்நாட்டில ஒன்றுமில்லை. அது இன்னதற்கு ஆகும் என்று நமக்குச் சொல்லத் தெரியாவிட்டாலும், அதுவும் ஒரு மருந்துக்காகும் என்றுதான் நம்ப வேண்டிய விதத்தில் அது அமைந்திருக்கும். அவ்வளவு ஆராய்ச்சி செய்து, நமது முன்னோர்களாகிய சித்தர்கள் எனப்படும் மகான்கள் இச்சித்தவைத்தியத்தை [illegible]

[illegible]தியமானது மிக மிகப் பழமையானதும், எளிதில் மருந்துகளை செய்து கொள்ளக்கூடியதும், விரைவில் நோய்களை விலக்கக்கூடியதும், நீண்ட காலம் ஆயுளை வளர்த்திக் கொள்ளக்கூடியதுடன் தமிழ் மக்கள் எளிதில் அறிந்து நடத்தக் கூடியதாகவும் அமைந்து இருக்கிறது. இன்னமும் இதனை விரிக்கப் புகின் மிக விரியுமாதலால், இத்துடன் இதை முடித்துக்கொண்டு, இதன் தற்கால நிலைமையைப்பற்றிச் சிறிது விளக்க விரும்புகின்றேன்.

இதன் தற்கால நிலைமை

இன்று நம் நாடு ஆங்கிலேயர் வசமாகி இருப்பதால், ஆங்கில நாட்டு வைத்தியம் நம் நாட்டின் நகரங்களிலும், சிற்றூர்களிலும் அரசாங்கத்தாராலும், ஸ்தலஸ்தாபன மேற்பார்வையிலும் அமைக்கப்படும் வைத்தியசாலைகளில் 100-க்கு 95-க்குக் குறையாமல் ஆங்கில இலவச வைத்தியசாலைகளாகவும், தனிப்பட்ட ஆங்கில வைத்தியத்தை ஜீவனத்துக்கென்று பயின்ற பெரும் பாலோரால் தனித்தனியாக வைத்திய நிலையங்களும் மலிந்துகிடப்பதாலும், நம் நாட்டு மக்கள் மனதில் தப்பாகவோ, சரியாகவோ தத்தம் நோய்களுக்கு ஆங்கில வைத்திய முறைப்படி சிகிச்சை பெறுவது தான் நாகரீகமென [illegible]



வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தாலும், நம் நாட்டு வைத்தியத்துக்கும், வைத்தியர்களுக்கும் நாளுக்கு நாள் ஆதரவும் மதிப்பும் முற்றோக்கும் குறைந்து வருகிறது. இது நம் நாட்டு வைத்தியக் கலை பிற்போக்கடைவதற்கு பெருங் காரணமாக இருந்தாலும், நம் நாட்டு வைத்தியர்களுடைய ஒழுக்கம், ஒற்றுமை இல்லாமை, சொற் சுத்தமில்லாமை, அறியாமை, பொறாமை இவைகளாம் நமது முற்போக்கு தடைபடுத்துகிறது. இதுவே 100-க்கு 100 ஆக அதன் பிற்போக்கிற்குக் காரணமாக எடுத்துக் காட்ட ஆதாரவாகவும் அமைந்துவிடுகிறது. அத்துடன் நம் நாட்டு மக்களுக்கு நம் நாட்டின் மீதோ, கலைகளின் மீதோ போதிய பற்றுதலும், ஆசாவும் இல்லாதக் குறைகளும், நம் கலைகளின் பிற்போக்குக்குள்ளக் காரணங்களுக்கு உதவியளித்து வருகிறது. இப்படியே நமது நாட்டு வைத்தியத்தைக் குறித்தோ, அதன் கலைகளைக் குறித்தோ நாம் கவலையற்று இருந்தால், சொல்வதற்குரும், எண்ணுவதற்கும் அருமையும் பெருமையும் வாய்ந்த நமது முன்னோர்களால், நமக்கு எளிதில் கிடைத்த இவ்வரியப் பொருள்களைத் தெருவில் இறைத்துவிட்டு, மற்றொருவன் கொடுக்கும் பொருளுக்குக் கையேந்தித் தவித்து நிற்கும், ஒரு தனவந்தனும் ஒரு பெரும் கொடையாளியாக வாழ்ந்தவனுமுடையப் பின்னைக்கு ஒப்பாக மதிக்கப்படுகிறோமே தவிர வேறு இதற்கு நிகராக எதைச் சொல்வது?

சித்த வைத்தியர்களாகிய நாமெல்லோரும், நமக்குள் முரண்பாடுகள் இன்றி, தன்னிலமகற்றி, அக்கலையில் உண்மையான பற்றுடன் நம்மை எவராலும் பிரிக்க முடியாத ஒற்றுமையுடன் இருந்தும், நடந்தும் வருவோமேயானால், நாமெல்லாம் நம்முடைய பின் சந்ததியார்களுக்கு எல்லாம் வழிகாட்டியவர்களாகவும், நமது ஆயுள் முழுதும் நன்றாக வாழ்வோமென்பதும் உறுதி! உறுதி! திண்ணம்.

ஆதலால், போனதுபோகஇனியும்இம்மாதிரியான இழி நிலைக்கு நம்மையும், நமது கலைகளையும் உட்படுத்திக்கொள்ளாமல், இவைகளின் முற்போக்குக்கான வழிகளை நாமெல்லோரும் இம்மாநாட்டில் நன்காராய்ந்து அவைகளுக்காவன கண்டு பிடித்து, முயற்சித்து, சுலபத்தில் நடைமுறையில் அனுஷ்டித்து, மேம்பாட்டடையும் வழியில் தீர்மானங்களை நிறைவேற்றி, அதன்படி நமக்குள்கலந்து, ஒத்து ஒழுகிவர முற்படுவோமேயானால், நாமும் நமது கலைகளும் முன்னிருந்த உச்சநிலைக்கு வந்துவிடுவோ மென்பது நிச்சயம்.

இதுவரையிலும் எனது சொற்பொழிவை பொறுமையோடு இருந்து கேட் [illegible]

திருச்சி சுயமரியாதை மாநாடு

தோழர் டி. பொ. வேதாசலம் அவர்கள் வரவேற்புரை

திருச்சியில் நடைபெற்றசுயமரியாதை மாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்களின் சொற்பொழிவின் சென்றவாரத் தொடர்ச்சி:-

சமணரைக் கழுவேற்றிய படலம்

மதத்தினின் மானமிக்கார்
தாங்களே வலியவேறிப்
பதைத்திட விருந்தாரனைப்
பரிதலையவனாச் சைவ
விதத்தினி லொழுக்கம் பூண்ட
வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத்திடச் செய்தேரிட்டார்
திரிதலைக் கழுகோறன்னில்.
ஞானமாமத நீர் சோர
ஞானசம்மந்தரென்னும்
மானமாயானை வந்து
கடம்பமா வனத்திற்றுன்னும்
வனமாஞ்சமணரென்னும்
தருக்களை யொடித்துவெண்ண
ருமாப்பூழி யள்ளித் தூற்றிய
தவனியெங்கும்.

ஒழுக்கமற்ற பல பெரும் தீச்செயல்களைச் செய்கின்றார்கள் பெரிய புராணத்திலே சொல்லப்படும் நாயன்மார்கள். தாங்கள் செய்வதெல்லாம் அடியார்களை திருப்தி செய்யவே. சிவனே அடியார் வடிவத்திலே வருகின்றார்.

மக்கள் நல்லொழுக்கத்தை விட்டு தீயொழுக்கத்தை கடைப்பிடித்து அதன் வழியே கடவுள் அருள் பெற ஆயிற்று. இதனாலே நாட்டில் இரண்டு தீங்குகள் ஏற்பட்டன.

1. சிவவேடத்துடன் திரியும் ஒரு பெரிய வேலையில்லாத கூட்டம்.

2. கடவுள் அருள் பெற சிவனடியார்களை உபசரித்து சிவ கைங்கரியங்களை மேற்கொண்டால் எந்த வகையிலும் பணம் சம்பாதிக்கலாமென்ற ஒரு நியாயம்.

கும் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்தி, உங்களனைவரையும் மீண்டுமொருமுறை வரவேற்று எனது சொற்பொழிவை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

*　　*

சென்ற வாரம் 'குடி அரசி'ல் சித்த வைத்திய மாகாண மாநாட்டுச் செய்தியில், பட்டணம் வைத்தியர் பேசினார் என்பதற்குப் பதிலாக பள்ளி மாணவர் ஈ. வி. கே. செல்வரும், டி. பி. கேசவன் நாயர் என்ற இருவர்களும் பேசினார்கள் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

இவையே தமிழ்நாட்டு மக்களையும் ஒழுக்கத்தையும் சீர்கேடாக்கி விட்டதென்பதைச் சொல்லி மதத்தின்பேரால் நடக்கும் அட்டூழியங்களைக் குறிப்பேன்.

(1) சாமியார்களென்ற பெயர் கொண்டு திரியும் கூட்டம்.

இதில், கைமடக்காத சாமியார்
விரல்களை மடக்காத சாமியார்
உறங்காத சாமியார்
சோறுதின்னாத சாமியார்
பேசாது மௌனமாயிருக்கும்சாமியார்
கோவணங்கட்டாத சாமியார்

இவர்களால் மக்களுக்கு ஏற்படும் துன்பம் அதிகப்படுவதால் License பெற்றே சாமியாராகயிருக்கலாமென்று விதி ஏற்படுத்தவேண்டும். Hatayoga swami இவர்கள் ஜாப்தா எல்லா போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டு தவறு ஏற்பட்டால் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்.

(2) ஆசிரமங்கள்: நாட்டின் பல பாகங்களில் இவைகள் தோன்றி மக்களின் அறிவுக்கும் செல்வத்திற்கும் பெரும் தடையாக இருந்து வருகின்றன. இவைகளையும் அரசாங்கத்தார் சட்டங் கொண்டு தடைப்படுத்த வேண்டும்.

(2 a) யோக புத்தகங்கள்: பல வர்ணங்களால் தீட்டப்பட்ட பல புத்தகங்கள் யோக முறைகளைக் காண்பிக்கப்பட்ட நாட்டில் மூளை கோளாறு அதிகமாய் மாணவர்களிடையே காணப்படுகின்றது.

b. புராண பிரசங்கங்கள் ராமாயண காலக்ஷேபங்கள் கீதா உபந்நியாசங்கள்.

c. நாட்டில் நடக்கும் யாகங்கள், கும்பாபிஷேகங்கள், லக்ஷ தீபங்கள், அன்னாபிஷேகங்கள்.

d. சக்தி பூஜை என்ற பேரால் நடத்தப்படும் பல அட்டூழியங்கள்.

(3) உணவுப் பொருள்கள் நாசப்படுத்தலும் மக்கள் பரிதாப நிலையும்: தேன், பால், தயிர், நெய், அரிசி, பருப்பு பலவகையான தானியங்கள் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. மிகவும் வேண்டற்பாலன. நம் நாட்டில் பங்கீடு முறை அனுசரிப்பதில் இவை போதுமானது உற்பத்தியாகவில்லையென்பதும் தெரிகின்றது. கடவுள் பேரால் இவைகள் நாசப்படுத்தப்பட்டு வருவதை அரசாங்கம் அடியோடு நிறுத்தி இந்தப் பண்டங்களை மக்கட்கு உபயோகமாகத் திருப்பவேண்டும்.

(4) திருவிழாக்கள் நடத்தப்படுவதால் பெரும்பாலான ஏழை மக்களுக்கு Pilgrim Tax என்ற வரி போடுவதும் சிதம்பரத்தில் ஆனித்திருமஞ்சனம், மதுரையில் ஆவணி மூலம், ஸ்ரீரங்கம் ஏகாதசி முதலிய திருவிழாக்கட்கு மகமதியன் கிறிஸ்தவன் சுயமரியாதைக்காரன் உள்பட எல்லா மக்கட்கும் ரயில்வே பிரயாணச் சீட்டு கொடுப்பதை [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

களை அடியோடு சட்டமூலம் கிறுத்துதல்.

(5) மடங்களும் மடாதிபதிகளும்: மடாதிபதிகள் துறவிகள், உலகப் பற்றுகளையெல்லாம் விட்டவர்கள், கடவுள் சிந்தனையாகவே விருப்பவர்கள். பல பெரும் சொத்துக்கள் இவர்கள் வசமிருப்பது இவர்கள் தெய்வ சிந்தனைக்கும் நல்வாழ்க்கைக்கும் இடையூறேயாகுமாதலால், நாட்டில் பெரும்பாலான மக்கள் எண்ணப்படியே மடாதிபதிகள் சாப்பாட்டிற்கு மாதம் ரூ. 100 மட்டும் அரசாங்கம் ஒதுக்கி விட்டு பாக்கிச் சொத்துக்களை சட்ட மூலம் மக்கள் அறிவை அதிகப்படுத்த கல்லூரிகள் ஏற்படுத்த சட்டம் செய்யவேண்டும். பெரும்பாலான மக்கட்கு நலன்தரும் செயல்களையே அரசாங்கம் அதிலும் ஒரு நாகரீக அரசாங்கம் கைக்கொள்ள வேண்டுமென்ற எண்ணங்கொண்டு மேற்சொல்லியவைகளை வற்புறுத்துகின்றோம்.

சுயமரியாதைக்காரர்களாகிய நாம் பதவியில்லாதவர்களாய் பணமில்லாதவர்களாய் அதிகாரமில்லாதவர்களாயிருந்து கொண்டு உண்மை, நியாயம், ஒழுக்கம் இவையே அடிப்படையாகக் கொண்டு மக்கள் வாழ்க்கையை சமப்படுத்தி செம்மைப்படுத்தி மனிதன் வாழ்விடையூறாயுள்ளவைகளை மதத்திலும் சமூகத்திலும் மக்கள் நடத்தையிலும் ஏற்படும் இடையூறுகளை உதறித் தள்ளி சீர்படுத்திக் கொண்டு வருகின்றோம்.

நம்மைப் பழிப்பவர்கள் பலர்; நாட்டில் செல்வாக்குடன் வரும் 'Hindu' பத்திரிகை நம்மை சும்மா விட்டுக்கொண்டிருக்கப்படாதென்று தலையங்கங்கள் எழுதியது. பெரிய அதிகாரிகள், ஜமீன்தார்கள், பெரிய பணக்காரர்கள், பெரிய உயர்ந்த ஜாதிக்காரர்கள், மடாதிபதிகள், மிகப்படித்தவர்கள் இவர்களெல்லோரும் நம்மை வெறுப்பவர்கள். இவைகளையெல்லாம் பொருட்படுத்தாது செயலாற்றி வெற்றியும் பெற்று வருகின்றோம்.

நம் அருமைத் தலைவர் தளர்ந்த வயதில் நம்மோடிருந்து உணவருந்தியும் உறங்கியும் பல ஊர்கள் அலைந்தும் எல்லாருக்கும் நல்லனாய், காட்சிக்கினியனாய், ஏழைப் பங்காளனாய், இன்சொல் பகர்ந்து நம்மையெல்லாம் ஊக்கியும் உணர்ச்சி கொடுத்தும் வருவது மிகவும் போற்றத்தக்கதே. அவர்கள் பல காலம் நல்லுடல் செயல் பெற்று வாழவேண்டுமென நலம் விரும்புகின்றோம்.

இம்மாநாடு செவ்வென நடந்து நற்செயல்களை மேற்கொள்ள நமது அருமை நண்பரும் பேரறிவுடையாரும், நல்லிசைப் புலவருமாய தோழர் பாரதிதாசன் நம் அழைப்புக் கிணங்கி இங்கே வந்திருப்பதும்,

பேசியும், எழுதியும், நடித்தும் தமிழ் மக்களை ஓயாது பல நாளாய் தட்டியெழுப்பி அறிவூட்டும் நமது அருமை நண்பரும், உயர்குண சீலரும், அறிவு ஆற்றல் ஒழுக்கமெல்லாம் ஒருங்கமையப் பெற்ற நமது அருமைத் தோழர் சி. என். ஏ. அவர்களையும் மற்றும் இங்கே வந்திருக்கும் எல்லா இயக்கத் தோழர்களையும் வரவேற்று இம்மாநாடு இனிது நடக்கத் துணைபுரியுமாறு வேண்டுகின்றேன். வாழ்க தமிழ் மக்கள்! வாழ்க தமிழ்நாடு!! வாழ்க தமிழ் மொழி!!! வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக! அழிகியதெல்லாம் அறிவின் நாமமே சூழ்க வையகம் துயர் தீர்க்கவே.

பறக்கும் குண்டுகளும், ஜப்பானியரின்
கொடுமைகளும் நிறைந்த இந்தப்போரில்

செஞ்சிலுவை

மனித சமுதாயத்திற்காக பாடுபடுகிறது:
நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும்
காப்பாற்றுகிறது.
யுத்தக் கைதிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே

"செஞ்சிலுவைக்காக"

என்ற தலைப்பில்

மே. த. கவர்னரின்

யுத்த நிதிக்கு

பண உதவி செய்து

ஒரு சிறந்த காரியத்திற்கு
உதவி புரியுங்கள்.

நாகர்கோவில் தொண்டர் படை

நாகர்கோவிலிருந்து நாஞ்சிநாடு திராவிட தொண்டர் படையொன்று நாஞ்சிநாடு முக்கிய கிராமங்களில் சென்று பிரச்சாரம் செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

நன்றி உரியதாகுக

30-6-44ல் செம்பியமகாதேவியில் திருவாவடுதுறை தோழர் டி. என். இராசரெத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் நாங்கள் செய்து கொண்ட வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு (சிரமமாக இருந்தாலும்) சிரமத்தைப்பாராமல்வந்து கலந்து சிறப்பித்து கொடுத்த எல்லா தோழர்களுக்கும் எங்களைப் பாராட்டி வாழ்த்து இதழ்கள் வாசித்தளித்து பாராட்டி கௌரவித்ததற்கும், வாழ்த்து தந்திகளும், வாழ்த்துப்பாக்களும் வாழ்த்துக் கடிதங்களும் அனுப்பிய தோழர்கள் யாவர்க்கும் எங்களது தாழ்மையான வணக்கத்தையும் நன்றியறிதலையும் இதன் மூலம் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றன.

கன்னாம்புலும்,
இ. க. வெங்கடப்பா

குடி அரசு

1944-ஆம் ஆகஸ்டு-மீ 12-உ

திராவிடர்களே சேலம் மாநாட்டிற்கு செல்லுங்கள்

ஜஸ்டிஸ் மாகாண மாநாடு 20-8-44ல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுவரும் விபரம் சென்ற வாரமே எழுதி இருந்தோம்.

அம்மாநாடு நம் கொள்கைகளில் ஒரு முக்கியமான மாநாடாயிருக்கும் என்பது தவிர மாநாடு நடவடிக்கையிலும் வெகுகாலம் ஞாபகத்திலிருக்கத்தகுந்த ஒரு முக்கிய சம்பவ மாநாடாகவும் இருக்கலாம் என்றே கருதுகிறோம்.

ஏனெனில் மாநாட்டில் 2, 3 வித அபிப்பிராயங்கள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு வெற்றியை எதிர்பார்க்கும்

இதன் பயனாய் கலவரம் கூப்பாடு தடை வேலை ஆகியவைகளின் மூலம் தொல்லைகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஜஸ்டிஸ் கட்சிக்கு அது தோன்றியகாலம் முதல் இந்தப் "பெருமைகள்" பல மாநாடுகளுக்குச் சொந்தமாக இருந்து வருகின்றன.

இந்த இருபது வருஷ காலமாய் சென்னை, திருச்சி, நெல்லூர், தஞ்சை முதலிய பல இடங்களில் நடந்த மாகாண மாநாட்டு நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டுவந்து பார்த்தால் இந்த உண்மைகள் தெளிவாக விளங்கும்.

பொதுவாகவே 'ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாடு என்றால் பதவிச் சண்டைதான்' என்பதாக நம் எதிரிகளின் விஷமப்பிரசாரம் ஒருபுறமிருந்தாலும் நம் மக்கள் பலர் அதற்கு ஆதாரம் ஏற்படும்படியான மாதிரியில் நடந்து கொள்வதும் அடியோடு இல்லை என்று சொல்ல முடியாது.

காங்கரசிலும் பதவிக்குஆக வெளிப்படையாய் சண்டை இல்லாவிட்டாலும் பதவியையும் தேர்தலையும் சிறிது நாட்களுக்கு தள்ளி வைத்து தீர்மான வேலை செய்யவேண்டுமென்று சொன்ன காலத்தில் அன்றைய மாநாடுகளில் கலவரம் சிறிதாவது நடக்காமல் இருக்கவில்லை.

அன்றியும் பதவிக்காரர்களும் அல்லாதவர்களும் சேர்ந்து இருக்கும் எந்தக் கூட்டங்களிலும் இது இயற்கையும் சகஜமுமாகும். எப்படி இருந்தாலும் பொதுமக்கள் உறுதியோடும் கட்டுப்பாட்டுடனும் இருந்து முனைந்து நின்றால் எது அவசியமும் நியாயமும் ஆகுமோ அது நிலைநிற்கும் என்பதோடு காரியத்திலும் அமுலுக்கு கொண்டு வரப்படக்கூடியதாகும் என்பதில் நமக்கு ஐயமில்லை. எது எப்படி ஆனாலும் சரி இம்மாநாடு ஜஸ்டிஸ்கட்சி சரித்திரத்தில் ஒரு முக்கிய இடம் பெற்றுத் திகழுமென்பது நமது கருத்தாகும்.

ஆகவே கீழ்க்கண்ட கொள்கைகளை ஆதரிக்கும் திராவிட மக்கள் ஆண் பெண் இளைஞர் ஒவ்வொருவரும் தவறாமல் அவசியம் சேலம் மாநாட்டிற்குச் சென்று,

நாம் திராவிடர், நம் கழகம் திராவிடர் கழகம், நமக்கு வேண்டியது திராவிடநாடு.

என்பனவாதிய கொள்கைகளுக்கு ஒரு சிறு அணுவளவு கேடும் தொல்லையும் ஏற்படாமல் உறுதிப்படுத்தி அதற்குஆக அதி தீவிரக் கிளர்ச்சியோடு வேலை செய்து வெற்றிபெறத்தக்க வண்ணம் மாநாட்டை சீரும் சிறப்பாக நடத்திக்கொடுத்து அதன் மூலம் பெரியதொரு நலமும் வெற்றியும் காண முயலவேண்டுமென ஆசைப்படுகின்றோம்.

முடிவாக ஒன்று சொல்லுகிறோம். அதாவது, ஜின்னா காந்தி சந்திப்பில், உங்களை—திராவிட நாட்டை மறந்து விடும்படியாகவோ அலட்சியமாய்க் கருதும்படியாகவோ நாம் நடந்து கொள்ளக் கூடாது என்பதே.

ஓங்குக திராவிடர் கழகம்! தோன்றுக திராவிடநாடு!! வாழ்க திராவிடர்!!!

பெரியார் ஈ. வெ. ரா.

(இம்மாத) சுற்றுப் பிரயாண நிகழ்ச்சி

12-8-44	ஈரோடு, உண்மைவிளக்க கல்வி நிலைய ஆண்டு விழா தலைமை.
13-8-44	அவினாசி, கோவை ஜில்லா தேவேந்திரகுல வேளாளர் மாநாட்டுக்கு அவனாசியில் தலைமை.
18-8-44	திருவாரூர் சந்திரோதய நாடகத்திற்குப் போகக்கூடும்.
20-8-44	சேலம் மாநாடு தலைமை
22-8-44	இராசிபுரம் மாநாடு திறப்பு.
27-8-44	கரூர் சுயமரியாதை மாநாடு.
28-8-44	நாகபட்டணம் போர்வாள் நாடகத்திற்குத் தலைமை.
30-8-44	மாயவரம் தோழர் வி. கனகசபை நாடார் மகன் திருமணம்.
3-9-44	ஈரோடு சித்தனார் காலேஜூக்கு தலைமை.

தேவாரப் பெருமை இதுதானா?

(சித்திரபுத்திரன்)

மூன்றாம் திருமுறை திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்களின் திருவால வாய்பண்—கௌசிகம் என்னும் தலைப்பில்,

3-வது பாட்டு

"மண்ணகத்திலு வானிலு
மெங்குமாம்
திண்ணகத்திருவாலவா யாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியப்
பேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்
திருவுள்ளமே"

என்பதாகும்.

இதன் கருத்து என்ன?

திருஞான சம்பந்தர் தமிழ்நாட்டில் ஆரியப் பிரசாரம் செய்வதற்கு முன்பு தமிழ்நாட்டில் இருந்த மக்கள் யார்? திராவிடர்கள் தானா அல்லவா?

அந்த திராவிட மக்கள் தானே இந்த சம்பந்தர் முதலிய பார்ப்பனர்கள் பிரசாரத்தாலும் ஜாலவித்தைகளாலும் பலாத்காரக் கொடுமைச் செயல்களாலும் சைவர்களாக ஆனார்கள்.

இந்த திராவிடர்களின் (பெண்களை) மனைவிகளைத் தானே "கற்பழிக்கத் திருவுளமே" என்று சம்பந்தர் பாடினது? அல்லது வேறு யாரையாவதா? அல்லது இதற்கு வேறு பொருளா? என்கின்ற விபரத்தை பண்டிதர்கள், சைவப் பண்டிதர்கள், அல்லது கிருபானந்த வாரியார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் போன்ற சைவ அன்பர்கள் விளக்கினால் கடப்பாடுடையவனாக இருப்பேன்.

இராசிபுரம் திராவிட இளைஞர் மாநாடு

இராசிபுரத்தில் ஓரியண்டல் நாடகக் கொட்டகையில் திராவிட இளைஞர் மாநாடு 22-8-44ல் நடைபெறும்.

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், தலைவர்.

பெரியார், ஈ. வெ. ரா. திறப்பாளர்.

பிரபல வியாபாரி தோழர் பி. ஏ. சித்தப்ப செட்டியார், வரவேற்புக்கழகத் தலைவர்.

தோழர் தெய்வசிகாமணி, காரியதரிசி.

தோழர் ஏ. கே. முகமதுமைதீன் சாயபு, பொருளாளர்.

மாநாட்டு இரவு, பெரியார் தலைமையில் திராவிட மறுமலர்ச்சி/ சபையாரால் நாடகம் நடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறதென விளம்பர அதிகாரி வி. சுந்தரம் தெரிவிக்கிறார்.

அவினாசியில் மாநாடு

கோவை ஜில்லா தேவேந்திரவேளாள மாநாடு அவினாசியில் 13-8-44 தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். டை மாநாட்டுக்கு திராவிட நாட்டு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் வி. வீராசாமி கொடி உயர்த்துவார்.

அதுசமயம் தோழர்கள் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், வி. வீராசாமி, கே. மருதாசலம் சொற்பொழிவாற்றுவார்கள்.

கோவை தோழர் அ. பழனிசாமி கவுண்டர் பி. ஏ. பி. எல், அவினாசி பஞ்சாயத்து போர்டு நிர்வாக ஆபிசர் கே. வேலாயுதம் பி.ஏ, முதலியவர்களும் மற்றும் அநேக வெளியூர் அன்பர்களும் மாநாட்டுக்கு விஜயம் செய்வார்கள்.

கோவைஜில்லா கலெக்டர்

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் தோழர் ஆர் டி. பால், கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டராக மாற்றப்பட்டிருக்கிறார்.

கோயமுத்தூர் டெபுடி கலெக்டர் தோழர் எச். எஸ். பால் வடஆற்காட்டுக்கும், வடஆற்காடு ஜில்லா டெபுடி கலெக்டர் தோழர் டி. என். தனராஜ் கோயமுத்தூருக்கும் மாற்றப்பட்டிருக்கின்றனர்.

அம்மன் தாலியும் போச்சு கையும் முறிந்தது

திருப்பத்தூர் (வ. ஆ.) சின்னகுளம் மாரியம்மன் கோவிலில் 5-8-44-ஆம் தேதி இரவு சுமார் 4 மணிக்கு யாரோ பூட்டை உடைத்துக் கொண்டு உட்புகுந்து மூன்று குத்து விளக்குகளையும், சில அணிகளையும், அம்மன் கழுத்தில் அணிந்திருந்த தாலியையும் திருடிக் கொண்டு போய்விட்டதுடன், அம்மனது வலது கரத்தையும் முறித்து அம்மனையும் கீழே தள்ளிவிட்டு சென்றார்கள் எனத் தெரிகிறது.

ஈரோட்டில் 'கிந்தனார்'

கோவை ஜில்லா திராவிடர் கழக நிதிக்காக 3-9-44-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 மணிக்கு பார்க்பிச்சர் பாலஸ் தியேட்டரில் (டவுன் டாக்கீஸில்) பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் "கிந்தனார்" காலட்சேபம் நடத்தப்படும்.

க. அர்ச்சுனன், தலைவர்.
எஸ். ஆர். சந்தானம்,
பி. பழனிச்சாமி, செயலாளர்கள்.

வட ஆற்காடு ஜில்லா பருவத ராஜகுல மாநாடு

வட ஆற்காடு ஜில்லா பருவதராஜகுல முதலாவது மாநாடு வாணியம்பாடியில் 30-7-44ம் தேதி சென்னை தோழர் கா. பொன்னுசாமி நாட்டார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். அண்ணாசாமி நாட்டார் வரவேற்புச் சொற்பொழிவாற்றினார். எடப்பாடி தோழர் எஸ். சின்னாண்டி பக்தர் மாநாட்டைத் திறந்து வைத்தார். குடியாத்தம் டாக்டர் பி. பழனி நாட்டார குழந்தைகள் அம்பிகையும் மூர்த்தியும் 'உடன் பிறந்தார் உரையாடல்' என்பதுபற்றிப் பேசியபின் தோழர்கள் ஆற்காடு கா. திருவேங்கடசாமி நாட்டார், மயிலை சி. பஞ்சாட்சரம், கெ. சுப்பிரமணிய நாட்டார், எடப்பாடி சி. இராமசாமி, எம். வைத்தியலிங்க பக்தர், எஸ். கே. ஜி. நாராயண பக்தர், நாதஸ்வரம் உபாத்தியாயர், குமாரசாமி நாட்டார், திருப்பத்தூர் மு. முனிசாமி நாட்டார், குடியாத்தம் டாக்டர் பி. பழனி நாட்டார், கடலூர் கே. கோதண்டபாணி நாட்டார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தோழர் வாணியம்பாடி எம். அண்ணாசாமி நாட்டாரை தலைவராகவும் டாக்டர் பி. பழனி நாட்டாரை செயலாளராகவும், வாணியம்பாடி ம. கொ. முனுசாமி நாட்டாரை பொருள் காப்பாளராகவும் கொண்ட வடஆற்காடு ஜில்லா பருவத ராஜகுல சங்கம் நிறுவப்பட்டது. டை ஜில்லாவில் கிராமங்கள் தோறும் டை சங்கத்தின் கிளைகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும், 2-6-44 'தினமணி' பத்திரிகையில் வெளிவந்துள்ளபடி முறிந்து போன ஆனந்த நாட்டுப் பொதுப் பணத்தைத் தருந்த வழியில் வசூல் செய்யும்படி டை ஜில்லா சங்க நிர்வாக அங்கத்தினர்களுக்கு அதிகாரமளிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தீ மிதித்தல் பக்தியினாலா?

துறையூரில் நடந்த திரௌபதி அம்மன் விழாவில் கடைசி நாளாகிய 4-8-44ந் தேதியன்று அக்கினியில் இறங்கியதில் நமது இயக்க அன்பர்கள் வை. நடேசன், அ. வீ. நாராயணன் முதலியவர்கள் காப்புக்கட்டிக் கொள்ளாமலும் கையில் செங்கொடியுடன் பெரியார் வாழ்க! சூழ்ச்சி ஒழிக! என்ற சப்தத்தோடு அக்கினியில் இறங்கி இது பக்தியல்ல என்று வெளிப்படுத்தினார்கள்.

மேற்படி கோயில் தர்மகர்த்தா அனுமதி கொடுத்தால் ஒவ்வொரு வருடமும் முன்னணியில் இறங்க தயாராக இருக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்விழாவினால் ஏற்படும் உடையார்-நாயக்கர் தகராறு இவ்வருடம் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கிறது. இனியும் டை விழாவை நிறுத்தாமல் கவர்ன்மெண்டார் பார்த்துக் கொண்டிருந்தால் கொலை முதலிய பயங்கரமான முடிவுகள் ஏற்படும் என்பது நிச்சயமாகத் தோன்றுகிறது. கவர்ன்மெண்டார் கவனிப்பார்களாக.

சாமியில்லை என்று சொல்லும் சுயமரியாதைக்காரர்கள் அக்கினியில் இறங்கட்டும் பார்ப்போம் என்று சொன்ன காலம் மாறி சுயமரியாதைக்காரர்கள் அக்கினியில் இறங்க வருகிறார்கள், அவர்களை விடவேண்டாம் என்று சொல்லும்படியான நிலைக்கு காலம் மாறிவிட்டது பெரியாரின் உழைப்பால்.

புலிவலம் இன்னிசை வேளாளர் சங்கம்

டை சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா தஞ்சை தோழர் பி. வெங்கிடகிருஷ்ண பிள்ளை தலைமையில் 31-7-44 தேதி நடைபெற்றது. நீடாமங்கலம் தவில் வித்வான் தோழர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை கொடியேற்றினார். தோழர் டி. என். இராசரங்கம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். காலஞ்சென்ற கிருனூர் சகோதரர் தோழர் எம். கண்ணப்பா பிள்ளை படத்தை மன்னார்குடி இசை புலவர் தோழர் இராஜகோபால் பிள்ளை திறந்து வைத்தார். தோழர்கள் திருப்புகழ் வெங்கிடசுப்ரமணியர், மு. கருணாநிதி, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் முதலியோர் சமூக முன்னேற்றம் என்பதுபற்றிப்பேசியபின் தோழர் எம். கண்ணப்பா பிள்ளை காலஞ்சென்றதைக்குறித்து அனுதாபத்தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. தோழர் டி. என். நிலட்சப்பா பிள்ளை நன்றி கூறினார்.

அன்று இரவு தோழர் எம். கண்ணப்பா பிள்ளை அவர்களின் உருவப்படம் ஊர்வலமாக சிறந்த வாத்திய கோஷ்டியுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

ஐ. சி. எஸ். ஐயரின் சிறுமதி

(ஒரு நிருபர்)

சென்னை: மயிலைசங்கீதசபாவின் ஆதரவில் 4-8-44 மயிலாப்பூர் பி.எஸ்.ஹைஸ்கூல் ஹாலில் சிறந்த பாட்டுக்கச்சேரி நடைபெற்றது. இக்கச்சேரியைத் திறமையாக நடத்திய கோஷ்டியார் தோழர்கள் ஜி. என். பாலசுப்பிரமணியம், டி. சௌடையா, மணி ஐயர், வேணு நாயக்கர் ஆவர். கச்சேரியின் முடிவில் தோழர் எல். வி. கிருஷ்ணசாமி ஐயர் (ஐ. சி. எஸ்.) அவர்கள் சங்கீத கோஷ்டியாருக்கு வந்தனம் சொன்னார். சுப்பிரமணிய ஐயரின் பாட்டைப் புகழ்ந்து பேசினார்; சௌடையாவின் பிடில் வன்மையைப் புகழ்ந்தார்; மணி ஐயரின் மிருதங்கத்தை மிகுதியாகப் பேசினார். கஞ்சிரா வாசித்த வேணு நாயக்கரைப் பற்றி ஒன்றும் பேசாமல் இருந்து விட்டார். இவரால் புகழ்ந்து பேசப்பட்ட மூவரும் பார்ப்பனர்கள். பார்ப்பனர் அல்லாத வேணு நாயக்கரைப்பற்றி வேண்டுமென்றே இவர் ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டார். சபையை நடத்துவோரும், சபையில் இருந்தவர்களும் வேணு நாயக்கருக்கும் நன்றி செலுத்த வேண்டும் என்று ஐ. சி. எஸ். ஐயருக்குக் கவனப்படுத்தினார்கள். "கஞ்சிரா வேணு நாயக்கர்" என்ற குரல் சபையின் பல மூலைகளிலிருந்தும் கிளம்பியது. இத்தனை பேர் சொல்லியும் துவேஷபுத்தியுள்ள ஐ. சி. எஸ். ஐயர், வேணு நாயக்கருக்கு வந்தனம் சொல்லாமல் கடைசிவரையில் சும்மாயிருந்துவிட்டார். இந்த ஐ. சி. எஸ். ஐயரின் துவேஷ புத்தியை சபையோர் வெறுத்தனர். சபை கலைந்துபோகும் போதும் தெருக்களில் இதைப்பற்றியே ஜனங்கள் பேசிக்கொண்டனர். அரசாங்க இலாகா தலைமை ஸ்தானத்தை இந்த ஐ. சி. எஸ். பார்ப்பனரிடம் ஒப்பித்தால் இவர் தன் கீழ் உள்ள பார்ப்பனரல்லாத குமாஸ்தாக்களை என்னபாடு படுத்துவார் என்றும், இவ்வளவு துவேஷம் கூடாது என்றும், இது மிகச் சிறுமதி என்றும் பேசிக்கொண்டனர்.

நாகையில் அன்பானந்தன்

அல்லது

சமூக வெற்றி (போர்வாள்)

என்னும் நாடகம் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தலைமையில் நாகை திராவிட கழகத்தாரால் ராபின்சன் தியேட்டரில் 28-8-44ல் நடைபெறும்.

அதுசமயம் பல தலைவர்கள் கலந்து கொள்வார்கள். வேலூர் தோழர் சி. பி. சின்னராசு அன்பானந்தனாக நடிப்பார்.

16-வது சென்னை மாகாண நீதிக்கட்சி மாநாடு

திராவிட தொண்டர் படை

சேலம்: 8-8-44ல் காலை 10 மணிக்கு திராவிடர் கழகக் கட்டிடத்தில் தொண்டர் படைக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தொண்டர்படைத் தலைவராக தோழர் டி. எஸ். ராசகோபால், உபதலைவர்களாக தோழர்கள் என். எஸ். கோவிந்தன், வி. அய்யாவு, கே. ஜே. குப்புசாமி, காரியதரிசியாக தோழர் எம். பி. நடராசன் ஆகியவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*　　*

13-8-44 ஞாயிறு காலை 10 மணிக்கு சுயமரியாதைச் சங்கக்கட்டிடத்தில் தொண்டர்படைக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தொண்டர்களைச் சேர்க்க வேண்டி இருப்பதால் எல்லாத் தோழர்களும் இதையே அழைப்பாகக் கருதி திராவிடத் தொண்டர் படையில் ஏராளமாகச் சேரவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது. வெளியூர் தொண்டர் படை தோழர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடைபெற தொண்டாற்ற வேணுமாய் எல்லா திராவிட தொண்டர் படைகளையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வெளியூர் தொண்டர் படைகள் 16-ந்தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதினால் வசதியாக இருக்கும். வெளியூர் தொண்டர் படையினரும் உள்ளூர் தொண்டர்களும் சுயமரியாதை சங்கத்தில் 19ந்தேதி சனி இரவு 8 மணிக்குள் வந்து சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

திருவாரூர் டி. எஸ். இராசகோபால்,
தலைவர்.
எம். பி. நடராசன், காரியதரிசி.

முகவரி:-
திருவாரூர் டி. எஸ். இராசகோபால்,
திராவிடர் கழகம், செவ்வாய்ப்பேட்டை,
சேலம்.

இறுதிக்கடன்

தோழர் கே. நாராயணசாமி அவர்களின் தந்தை தோழர் கேசவ படையாட்சி அவர்கள் 19-7-44-ல் மறைந்ததை முன்னிட்டு 31-7-44-ல் தோழர் சு. பூவராகன் அவர்கள் தலைமையில் இறுதிக்கடன் நடைபெற்றது. தோழர் வை. இராமச்சந்திரன் பார்ப்பனியத்தை விளக்கிப் பேசிய பின்னர் தோழர் கே. நாராயணசாமியால் நன்றி கூறப்பட்டது. 'குடி அரசு'க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

*　　*

அன்று இரவு தோழர் பூவராகன் தலைமையில் நடந்த கூட்டத்தில், ஓடக்கநல்லூர் திராவிடர் கழகம் திறவப்பட்டது.

மருத்துவர்களுக்கு வேண்டுகோள்

சேலம், சேந்தமங்கலம் மருத்துவ சங்கக் காரியதரிசி தோழர் எஸ். எஸ். ஆனந்தம் விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில், திருச்சியில் நடந்த மாகாண மாநாட்டின் நடவடிக்கைகளையும் சேலத்தில் நடந்த ஆண்டு விழா நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் எல்லா மருத்துவர்களும் அறிந்து கொள்ளும்படி அச்சுப் பிரதியாக அச்சிட்டு வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறார்.

தஞ்சை செல்வம் சங்கம்

மேற்படி சங்கத்தின் கமிட்டிக் கூட்டம் 6-8-44-ல் நடைபெற்றது. மேற்படி சங்கம் தஞ்சை திராவிட மாவட்ட மாணவர் மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. மேற்படி மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவராக தோழர் பி. ஞான சௌந்தரபாண்டியன், காரியதரிசியாக தோழர் டி. கே. எஸ். பாலன், உபகாரியதரிசியாக தோழர் கே. என். ஜி. ராசன், கழக உறுப்பினர்களாக தோழர்கள் எம். சௌந்திரபாண்டியன், ஆர். சந்தானம், என். நாராயணசாமி, ஜி. கன்னையன், எஸ். சபாபதி, எ. டி. மீரான், பழனிவேலு, டி. என். கோவிந்தராசலு, விளம்பர அதிகாரிகளாக, பி. ஆர். எஸ். நாதன், எம். என். ராசன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திராவிட இளைஞர் கழகம்

(கொழும்புக் கிளை)

மேற்படி கழகத்தின் விசேஷ பொதுக் கூட்டம் சென்ற 2-8-44-ஆம் தேதி கொள்ளுப்பிட்டி, காலிரோட், 159-ம் இல்லத்தில் தோழர் எஸ். கே. பாலகிருஷ்ணன் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் என். எ. பழனிநாதன், எம். எ. பெரியசாமி முறையே 'நீயும்—அவனும்' 'மக்களும் இசையும்' என்ற பொருளைப் பற்றி பேசினார்கள். பின் தோழர் ஆறுமுகம் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

கல்வி விடுதி

வ. ஆ. திருப்பத்தூர் தாலுக்காவில் ஆதிதிராவிட பிள்ளைகள் உயர்தரக்கல்வியில் அபிவிருத்தியடைய திருப்பத்தூரில் ஓர் விடுதியை (கல்வி விடுதி ஆண்டல்) ஏற்படுத்த சமூக அபிமானிகள் தக்க முயற்சியை எடுத்துவருவதால் அது விஷயமாய் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். விபரம் வேண்டுவோர் தோழர் எ. குப்புசாமி அசோக நிலையம், சௌதமாபேட்டை, திருப்பத்தூர், (வ. ஆ.) என்ற விலாசத்திற்கு எழுதவும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திராவிடர் என்ற பதம் இழிவானதா?

நாளை 13-8-44-ஆம் தேதி மதுரை 182 மேலமாசி வீதியில் இருக்கும் தமிழ்ச் சுவைக் கழகத்தில் காலை 10 மணிக்கு ஒரு சொற்போர் கூட்டம் நடைபெறும்.

'திராவிடர்' என்ற பதம் இழிவானது என்று மதுரை தமிழ்க் கலைக் கழகத்தினரும், அதை மறுத்து தோழர் நா. இராமசாமி, இரா. ஜெகதீசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகிய பலர் பேசுவார்கள்.

தஞ்சை மாநாடு

17-7-44-ஆம் தேதி தஞ்சாவூரில் தோழர் உ. ப. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட திராவிட வாலிபர் மாநாட்டுக்கு வசூல் ரூ. 496-12-0 செலவு மொத்தம் ரூ. 483-2-6, மீதி இருப்பு ரூ. 13-9-6 என்றும், மேற்படி இருப்பு தோழர் B. ஜெம்புலிங்கம் நாடார் வசம் இருக்கிறது என்றும் மாநாட்டுக் காரியதரிசி தோழர் M. M. நடராஜன் தெரிவிக்கிறார்.

மதுரை தொண்டர்படை ஓர் வேண்டுகோள்

மதுரை: வருகிற கடைசி ஞாயிற்றுக்கிழமை (13-8-44) காலை 11 மணிக்கு நகர் தெ. இ. ந. உ. சங்கக்கட்டிடத்தில் தொண்டர்படை பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தொண்டர் படை ஆண்டு விழா நடத்துவதுபற்றி யோசிக்கப்படுமாகையால் இதையே அழைப்பாகக் கருதி அனைவரும் வர வேண்டுகிறேன் என காரியதரிசி தெரிவிக்கிறார்.

அனுதாபம்

கொழும்பு; தோழர் தெ. க. லட்சுமணன் அவர்களின் மனைவி தோழர் பிச்சையம்மாள் சில நாள் நோயுற்றிருந்து தமது 28-வது வயதில் சென்ற 12-7-44-ஆம் தேதி இயற்கையெய்தியதற்கு வருந்துவதாக தமிழ்நாடு அருந்ததியார் சமூக ஊழியர் சங்கக் கௌரவ காரியதரிசி தோழர் கு. யா. தேவதாசன் தெரிவிக்கிறார்.

துறையூரில் புரட்சிக்கவி

துறையூர் தேவாங்க சமாச சங்கத்தில் 27-7-44-ஆம் தேதி இரவு 9-30 மணிக்கு தமிழ்நாட்டின் புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள் "திராவிடர் எழுச்சி" என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். அதுசமயம் அன்னாருக்கு தெ. இ. ந. உ. சங்கத்தினர்களால் ஓர் வரவேற்பு இதழும், தன்மானக் கழகத்தாரால் ஓர் வரவேற்பு இதழும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. இரவு 11 மணிக்கு வந்தனோபசாரத் [illegible]

ஒரு திருத்தம்

"சென்னையில் 31-7-44-ல் நடைபெற்ற சந்திரோதய நாடகத்திற்கு வசூலான தொகையில் செலவு போக மிச்சப்பட்ட தொகை ரூபா 1100. தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், எம். கே. தியாகராஜ பாகவதரும் சேர்ந்து கொடுத்த தொகை ரூபா 900. ஆக மொத்தம் ரூபா 2000 இந்தத் தொகையில், இந்தி எதிர்ப்பில் உயிர்நீத்த தாலமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் நினைவுக் குறி நாட்டும் செலவு போக மிச்சப்படும் தொகையைச் சென்னை சுயமரியாதைச் சங்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நகர சுயமரியாதைச் சங்கத் தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்கள் கையில் கொடுக்கப்பட்டது. சென்னையில் சுயமரியாதைச் சங்கத்திற்காக ஒரு கட்டிடம் வாடகைக்கு வாங்கப்பட்டிருக்கிறது.

மரணம்

திருநெல்வேலி: திருமந்திரமூர்த்தி ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் தி. சு. இராமதாசு அவர்களின் மனைவியார் தோழர் விசாலாட்சி அம்மாள் 3-8-44-ஆம் தேதி தமது 18-வது வயதில் அகாலமரணம் அடைந்தமைக்கு தங்கள் அனுதாபத்தை அன்னாரின் கணவருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்வதாக திராவிட ஆசிரியர் கழக பொருளாளர் தோழர் டி. அழகேசன் தெரிவிக்கிறார்.

"உழைப்பாளிகளுக்கேன் இவ்வுலகம் இல்லை"

மேற்கண்ட புத்தகம் யாரிடமாவது இருந்தால் தயவு செய்து நமக்கு அனுப்பிக் கொடுத்தால் பின்னால் திருப்பியனுப்பிவிடுகிறோம்.

மானேஜர்.

'பெரியார் உருவச் சிலை'

ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் (ஜெ. பி. கிருஷ்ணன்) அவர்களது முயற்சியால் தயாரிக்கப்பட்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் உருவச் சிலைகள் நமது பார்வைக்கு வந்தன. அவைகளில் ஒருவகை 1 அடி உயரமுள்ளவை, மேஜைகள் மீதும், ஸ்டாண்டுகள் மீதும் வைக்கக்கூடிய மாதிரியில் அழகாக வர்ணங்கள் தீட்டப்பட்டு மண், சுண்ணாம்பு, சிமிண்ட் முதலியவைகளால் செய்யப்பட்டவை. மற்றொருவகை உட்கார்ந்திருக்கும் மாதிரியில் ½ அடி உயரத்திலிருக்கிறது. இதுவும் மேஜைகள் மீதும், ஸ்டாண்டுகள் மீதும் வைக்கக் கூடியது.

பெரிய சைஸ் விலை ரூ. 0-12-0
சிறிய சைஸ் விலை ரூ. 0-6-0
கிடைக்குமிடம்: ப. கண்ணன்,
ஜலகண்டபுரம், சேலம்.

'திராவிடநாடு' பைகள்

பவானி தோழர் எம். எஸ். பழனிச்சாமி அவர்களால், தயார் செய்யப்பட்ட 'திராவிடநாடு திராவிடருக்கே'என்றொரு புறத்திலும், 'பெரியார் வாழ்க' என்று மற்றொரு புறத்திலும் பொறிக்கப்பட்ட ஜமக்காளப் பைகள் நமது பார்வைக்கு வந்தன. அவை உறுதியாகவும், பார்வைக்கு அழகாகவும்; திராவிடரின் இலட்சியத்தை நினைப்பூட்டுவதாகவுமிருக்கின்றன.

பெரிய சைஸ் விலை அணா. 0-12-0
சிறிய சைஸ் விலை அணா. 0-10-0
கிடைக்குமிடங்கள்:
எம். எஸ். பழனிச்சாமி, பவானி.
ப. கண்ணன், ஜலகண்டபுரம்.

பிறப்பு

கோவை ஜில்லா திராவிடர் கழகத் தலைவரும் பழையகோட்டை இளைய குமார பட்டக்காரருமான தோழர் ந. அர்ச்சுனன் அவர்களுக்கு ஆகஸ்ட் 3-ஆம் தேதி ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் குழந்தையும் சுகமாயிருக்கின்றனர்.

"அறிவின் எல்லை"

பெரியாரின் எழுத்தும் பேச்சும் சேர்ந்த (11-புத்தகங்கள்) ஒன்றாக பைண்டு செய்யப்பட்ட புத்தகம் ஒன்று விலை ரூ. 1-4-0. தனிப்புத்தகம்வேண்டுவோர் ரூ. 1-7-0 அனுப்பவேண்டும்.

மானேஜர்.

'குடி அரசு' புத்தகங்கள்

சேலம் எக்சிபிஷன் கொட்டகையிலும், மாநாட்டுப் பந்தலிலும், "குடி அரசு" "பகுத்தறிவு" பதிப்பகப் புத்தகங்கள் விற்பனை செய்யப்படும்.

"குடி அரசு" பதிப்பகத்தார்.

• •

சேலம் எக்சிபிஷன் பந்தலிலும், மாநாட்டுப் பந்தலிலும் பெரியார் உருவச் சிலை பலமாதிரியில் ½ அடி 1 அடி உயரத்திலும், திராவிடநாடு திராவிடர்க்கே என்ற வார்த்தைகள் பொறித்த கை பைகளும் விற்கப்படும்.

ஜெ. பி. கிருஷ்ணன்.

• •

சிதம்பரம்கூட தென்பாதி கிராமத்தின் திராவிட இளைஞர் கழகத்தாரால் இழந்த காதல், லெக்ஷ்மிகாந்தன் என்னும் இரண்டு சீர்திருத்த நாடகங்கள் தோழர் டி. என். சக்ரபாணி அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு மேற்படி கழகத் தலைவர் தோழர் கே. வி. சிங்காரவேலு தலைமையில் நடிக்கப்பட்டன.

• •

ராசிபுரம் மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக ஒரு பொதுக் கூட்டம் நாமக்கல் தோழர் வி. மாரிமுத்து [illegible] முதலியார் தலைமையில் நடைபெற்றது. [illegible] தொழிலாளர் நலம் பற்றி [illegible] பேசினார்கள்.

ரோஜா முத்தையா

தமிழ் நாட்டுச் செய்திகள்

இலங்கை பெரியார் ஈ. வெ. ரா. வாலிபர் பிரசாரக் கழக மாதாந்திரப் பொதுக் கூட்டம் 14-7-44-ல் கொள்ளுப்பிட்டியில் தோழர் ஜான் செல்லையா தலைமையில் நடைபெற்றது. திராவிடர்நாடு பிரிவினையைக் குறித்துப் பல தோழர்கள் பேசினார்கள்.

* *

புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழகத்தின் முதலாவது உறுப்பினர்கள் தேர்தல் கூட்டம் 19-7-44-ஆம் தேதி தோழர் எஸ். முத்து வீருபிள்ளை தலைமையில் நடைபெற்றது. 10 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

நாகப்பட்டணம் திராவிடர் கழகத்தின் 5-வது மாதாந்திரப் பொதுக் கூட்டம் 19-7-44-ஆம் தேதி தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் நடந்தது. தோழர்கள் பி. ஜனார்த்தனன், இரா. நெடுஞ்செழியன், கே. கே. நீலமேகம், திருவாரூர் கருணாநிதி முதலியவர்கள் பேசினார்கள்.

* *

முசிரி தாலூகா மேல் சீனிவாசநல்லூர் முத்துராஜா இளைஞர் சங்கத்தின் ஆரம்பவிழா 19-7-44-ஆம் தேதி நடைபெற்றது. நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

சேலம் மாவட்ட மருத்துவர் சங்க முதலாவது ஆண்டு விழா 9-7-44-ஆம் தேதி தோழர் பி. ரத்னசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. கும்பகோணம் தோழர் ஆர். பாலகிருஷ்ணன் ஆண்டு விழாவைத் திறந்துவைத்தார். மண்ணச்சநல்லூர் தோழர் மாணிக்கம் கொடி ஏற்றினார். தலைவருக்கு சங்கத்தின் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டதும் மற்றும் பல தோழர்களுக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ராசிபுரம் சங்கத்தாரால் தலைவருக்கு வரவேற்புத் தாள் வாசித்தளிக்கப்பட்டது. தோழர்கள் பண்டித எஸ். எஸ். ஆனந்தம், திருச்சி டாக்டர் பிச்சைமுத்து ஆகியவர்கள் படங்களை தோழர்கள் ஈரோடு ஆர். ரெங்கசாமியும், கொழிஞ்சைப் பண்டிதரும் திறந்து வைத்தார்கள்.

* *

சிதம்பரம் மருத்துவகுல சங்கக் கூட்டம் 19-7-44-ஆம் தேதி தோழர் கோவிந்தசாமி தலைமையில் நடந்தது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

சீர்காழி மருத்துவர் பொதுக் கூட்டம் 19-7-44-ஆம் தேதி தோழர் சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினார்கள். 22-7-44 ஆம் தேதி தொழில் நிறுத்தம் செய்து தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது.

* *

சேலம் திராவிடர் கழக பொதுக்கூட்டம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்கக் கட்டிடத்தில் 20-7-44-ஆம் தேதி தோழர் எஸ். செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

ஈரோடு மருத்துவகுல சங்கத்திற்கு இரண்டாவது ஆண்டுக்கு தோழர்கள் என். எம். கே. பெருமாள் தலைவராகவும், பி. கோவிந்தராஜு காரியதரிசியாகவும், மற்ற நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 15 நிர்வாக உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். 19-7-44-ல் டை சங்கப் பொதுக் கூட்டம் நஞ்சமலை தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சங்கமும் நமது கடமையும் என்பது பற்றி பேசினார்கள்.

* *

திருவாரூர் மருத்துவர் சங்க ஆண்டு விழா 19-7-44-ஆம் தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. காரியதரிசியால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. தோழர் ஆர். எஸ். சுப்பையா வரவேற்றார். டாக்டர் சே. மலைப்பெருமாள் கொடியேற்றினார். பெரியார் படம், திராவிடநாடு படம், பண்டித எஸ். எஸ். ஆனந்தம் படம் ஆகியவைகளை முறையே தோழர்கள் பி. ஜனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன், ஏ. கே. சாமி முதலியவர்கள் திறந்து வைத்தார்கள். பல தோழர்கள் பேசிய பின், மருத்துவகுல சங்கமென்றிருப்பதை மருத்துவர் சங்கமென மாற்றவேண்டுமென்றும், பொது இடங்களில் சமஉரிமை பெறுவதற்கு மருத்துவர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும், மருத்துவ இளைஞர்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டுமென்றும், திருவாரூர் சங்கக் கட்டிடத்தை ரிப்பேர் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 'குடி அரசு'க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

பொன்மலை மருத்துவர் சங்க பொதுக் கூட்டம் 19-7-44-ஆம் தேதி தோழர் தாதமருத்துவர் தலைமையில் கூடியது. அதுசமயம், பொன்மலை (S. I. R.) ரயில்வே காலனி சக்விகுடில் ஆபீசர் உத்தரவு பிரகாரம் மூன்று மாத கெடுவு 31-7-44-ல் முடிவுறுவதாகவும் 1-8-44 லிருந்து தங்கள் கடையில் வேலை செய்யும் கூலியை பழைய முறையில் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்றும், [illegible]

திருவாரூரில் சந்திரோதயம்

திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் 18-8-44-ல் வெள்ளி இரவு 10-30 மணிக்கு பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் காஞ்சி திராவிட நடிகர் கழக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் கோஷ்டியாரால்

சந்திரோதயம்

என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

பெரியார் அவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

M. A. ஆறுமுக நாடார், முனிசிபல் கௌன்சிலர், தலைவர்.

V. பார்த்தசாரதி நாயுடு, M. துரைராஜ், உபதலைவர்கள்.

P. V. O. இராஜகோபாலன், M. K. ஐப்புலிங்கம், காரியதரிசிகள்.

டிக்கட் விபரம்:- ரூ. 5, 2, 0-8-0

கிடைக்குமிடம்:- 1-8-44 முதல்

P. V. O. இராஜகோபாலன், காசுக்கடை, விஜயபுரம்.

கோ. அண்ணாமலை, கலப்பை மார்க் சுருட்டுக் கம்பெனி, ஆண்டார் தெரு, திருவாரூர்.

மற்றும் பல இயக்க முக்கியஸ்தர்களிடமும் கிடைக்கும்.

பொருள்களை விநியோகம் செய்யுமாறு கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

நாமக்கல் தாலூகா தாழ்த்தப்பட்டோர் நலஉரிமைச் சங்கக் கூட்டம் 23-7-44-ல் தோழர் வி. எம். பழனிவேலு தலைமையில் நடைபெற்றது. திவான்பகதூர் ரெட்டமலை ஸ்ரீனிவாசன் அவர்களின் 85-வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சேவையைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேறியது.

* *

சேலம் மாவட்ட முதலாவது திராவிட இளைஞர் மாநாட்டுக்கு மொத்த நன்கொடை வசூல் ரூ. 530-12-0 என்றும், மொத்தச் செலவு ரூ. 579-0-9 என்றும், அதிகச் செலவு ரூ. 48-4-9 என்றும், இந்த அதிகச் செலவு தொகை மாநாட்டு நிர்வாகிகள் பொறுப்பு என்றும் காரியதரிசி தோழர் எம். ஆர். [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நான் படைத்தேன்' என பகவான் கீதையில் கூறுகிறார். வருணம் ஒழிந்தால் மதத்துக்கு ஆபத்து வந்துவிடும். ஆதலால் வருணாசிரம தர்மம் அவசியம் காப்பாற்றப்படவேண்டும் என்று பிரசாரம் செய்பவர்கள் வகுப்புத் துவேஷத்தை வளர்க்கவில்லையாம். ஆனால், நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் வருணாசிரம தர்மம் வேண்டாம் என்று சொல்லுகிற நம்மவர்கள் வகுப்புத்துவேஷிகளாம். இது ஒரு விந்தையல்லவா? நிற்க,

நமது இயக்கத்தைத் தாக்க புதியதோர் ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இராமாயணம். இராமாயண ஆராய்ச்சி என்ற ஓர் அரிய நூல் நமது தலைவர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வால்மீகி இராமாயணத்தையும், கம்ப இராமாயணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து அவையிரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து கண்ட அரிய கருத்துக்கள் அந்நூலில் மிளிர்கின்றன. தமிழன் ஒவ்வொருவனாலும் அந்நூல் படிக்கத்தக்கது. நிற்க,

இராமாயணம்

இராமாயணம் என்பது ஆரியருக்கும் திராவிடருக்கும் நிகழ்ந்த போரைக் குறிக்கும் ஒரு கதை என்று நடு நிலைமையும் ஆராய்ச்சியறிவும் உடைய புலவர்கள் பல்லோர் எழுதியிருக்கிறார்கள். ஆரிய மன்னனாகிய இராமன் திராவிடனின் உதவியைக் கொண்டு தமிழ் மன்னனாகிய இராவணனைத் தந்திரத்தால் வென்று அவர்களை அடிமையாக்கி, ஆரிய ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதைக் கூறுகிறது. இராமாயணம் ஆரியரது சூழ்ச்சியாலும் விபீஷணனது துரோகத்தாலும் நிகழ்ந்தத் தமிழரது தோல்வியை சித்திரித்து கூறுகிறது. ஆரியரைத் தேவர்களெனவும் திராவிடர்களைக் குரங்கு, கரடி, கழுகு, இராட்சதர்கள் எனவும் கூறித் திராவிடரை இழிவு படுத்துகிறது. இராமன் கடவுள் என்றும், இராவணன் கொடியவன் என்றும் கூறுகிறது. இன்னோரன்ன பல காரணங்களால் இராமாயணம் தன்மானமுள்ள தமிழரால் தள்ளத்தக்கதெனவும், நமது வெறுப்பினையும் நமது தன்மான உணர்ச்சியையும் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அதை எரிக்க வேண்டும் என நமது தலைவர் கூறினார்கள். இதில் குற்றமென்ன?

அதைக் கேட்டதும் கண்டித்தனர் பண்டிதர்கள், சிலர் சிரோன்மணிகள் வெருண்டனர் வித்துவான்கள். இவர்கள் யார்? ஆரியத் தோழர்களா? இல்லை இல்லை. பாவம் அவர்கள் இதில் நேர்முகமாகத் தலையிடவேயில்லை. அப்படியானால் போருக்கு எழுந்தவர் யார்? வீரத் தமிழரே.

நமக்குள்ளேயா போர்? ஆம்! இராமர் என்றைக்கு தென்னாடு வந்தாரோ அன்றே சகோதரப் போர்கள் மூண்டன அல்லவா? வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் மூண்டது. வாலி மாண்டான். அதைப் போலவே தென்னிலங்கையில் இராவணனுக்கும் விபீஷணனுக்கும் விரோதம் மூண்டது. விபீஷணன் காட்டிக்கொடுத்தான், இராவணன் மாண்டான். எனவே, இராமாயணத்தைப் படித்தாலும், படிப்பதைப் பக்கம் நின்று கேட்டாலும் அதைப் பற்றிப் பேசினாலும் சகோதரர்களுக்குள் பகைமை மூள்வது இயல்புதானே. அதனாற்றான் நமக்குள்ளும் சண்டை மூண்டது. இதில் வியப்பென்ன?

புலவர்களின் குதர்க்கவாதம்

வெருண்டெழுந்த புலவர்கள் ஒன்றாகக் கூடி ஆலோசித்தனர். நெடுநேரம் சிந்தித்து இராவணனைத் தமிழன் என ஒப்புக்கொண்டால் தன்மதிப்பு இயக்கத்தாரை வாதில் வெல்ல முடியாது. ஆகலால் இராவணனும் ஆரியன் தான் என்று வாதிட்டு தமது புலமைத் திறத்தால் கம்பனைக் காப்பாற்ற முடியும் என்னும் முடிவுக்கு வந்தனர். பிறகு புலவர்களும், பேராசிரியர்களும், பண்டிதர்களும் அதையே வற்புறுத்திப் பேசலானார்கள்.

இராவணன் தமிழன் அல்லன், அவனும் பக்கா ஆரியனே ஆகலான், இராமாயணம் என்பது ஒரு ஆரியனுக்கும் மற்றொரு ஆரியனுக்கும் நடந்த போராக இருக்க, இராட்சத பட்டத்தையும் தோல்வியையும் நாம் ஏன் வீணாக வலித்துக்கொள்ளவேண்டும். மேலும், கம்ப இராமாயணம் ஓர் சிறந்த காவியக்கலையாதலால் நெருப்பில் எரிக்கத்தக்கதல்ல, என்று கூறுகிறார்கள்.

தர்க்கத்திற்கு நிற்காதவை

நல்ல சமாதானம் ஆனால், காரணங்களோ, சான்றுகளோ பலமில்லாதவை. சில நொண்டிக் காரணங்களும், பகுத்தறிவுக்கொவ்வாத சில குருட்டுச்சான்றுகளும் சொல்லப்படுகின்றன. அவை தர்க்கத்திற்கும் வாதத்திற்கும் நில்லாதவை என்று அறிஞர்கள் வாயிலாக நான் கேட்டிருக்கிறேன். பொது மக்களும் இவ்வுண்மையை உணரவேண்டுமானால், இருதிறத்துப் புலவர்களும் ஒரு இடத்தில் கூடி இராவணன் ஆரியனா அல்லது தமிழனா என்பதை விவாதித்து ஒரு முடிவு கட்டுதல் சாலச்சிறந்தது. நிற்க,

ஒருக்கால் இராவணனும், இராமனும் ஆரியரே என்று விவாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் இராமாயணம் ஆரிய கதைதானே. அதையேன் தமிழர் பய பக்தியுடன் படித்துப் போற்றவேண்டும். மேலும், ஆரிய மன்னனாகிய இராமனை நாம் ஏன் கடவுளாகக் கொள்ளவேண்டும். தெய்வமாகக் கருதக்கூடிய தமிழ் முன்னோர் எவரும் நமக்கு இல்லையா? திருவள்ளுவர் இல்லையா? சேரன் செங்குட்டுவன் இல்லையா? வள்ளல்கள் இல்லையா? வீரர்கள் இல்லையா? இவர்களை எல்லாம் விடுத்து வடநாட்டார் ஒருவரையேன் நாம் கடவுளாகக் கொண்டாட வேண்டும். இதுமாத்திரமல்ல, கம்ப இராமாயணம் தோன்றிய பின்னர் தமிழ்நாட்டில் சங்க நூல்களையும், தமிழ் காப்பியங்களையும் தமிழர்கள் மறக்கலாயினர். கிராமங்கள் தோறும் பாரதமும், இராமாயணமும் பரவலாயின. தமிழில் பத்துக் காவியங்கள் இருந்தனவே அவையெல்லாம் எங்கே? எஞ்சி நிற்கும் இரண்டொன்றாவது தமிழர்களுக்குத் தெரியுமா? தெரியாது. வடநாட்டுக் காவியங்களும், புராணங்களும் தமிழ்நாட்டில் தோன்றிய பின்னர் தமிழ் நூல்கள் மறக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன. ஆதலால் இராமாயணம் எந்த விதத்தாலும் தமிழரால் ஆதரிக்கத்தக்கதல்ல என்பதுதான் எனது கருத்து. இதுவரை கூறிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் சில பாட்டுக்களைப் படிக்கின்றேன். ஆனால் அவைகள் எனதல்ல. என் சொந்த இரவல் என்று உங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (அப்பாட்டுகளை 12-ஆம் பக்கம் பார்க்க. ஆ-ர்.)

அன்பர்களே! நான் நீண்ட நேரம் பேசிவிட்டேன். எனது அதிகப் பிரசங்கத்தை மன்னிக்க வேண்டுகிறேன்.

என்னை இப்பணியாற்ற அழைத்த தோழர்களுக்கும், எனது வார்த்தைகளை இவ்வளவு நேரம் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்த உங்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களைக் கூறுகிறேன். இந்த மாநாடு வெற்றிகரமாக நடந்து தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமைவதாகுக என்று எல்லாம் வல்ல இறைவனை வணங்கி இம்மாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

* *

சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கபுரம் பெரியார் கழகத்தின் மாதாந்தரக் கூட்டம் 19-7-44-ல் கே. எ. சங்கரன் தலைமையில் நடந்தது. புது ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

அறிவிப்பு

முன்பு வெளியிட்ட இராமாயண ஆராய்ச்சி ஏழு காண்டங்களில், 7 காண்டமும் சேர்த்து வாங்குவோருக்கு ரூ. 1-12-0க்கு கொடுக்கப்படும். தபால் சார்ஜு வேறு என்று பிரசாரம் செய்து இருக்கிறோம். தற்சமயம் காகித விலை உயர்வை முன்னிட்டு டை 7 காண்டமும் ரூ. 2-3-0க்கு கொடுக்கப்படும். தபால் சார்ஜு வேறு. மானேஜர்.

சென்னை சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்த தோழர் கனகம்மையார் பாடிய பாட்டுகள்:

(1) விருந்தினராய் வந்தவர்கள் இங்கே தங்கி
வேர்தனையும் தந்திரத்தால் மயக்கச் செய்து
அருந்தவங்கள் செய்வார்போல் வேடம் பூண்டு
ஆரியத்தின் ஆதிக்கம் வலுக்கச் செய்தார்
பொருந்தாத சாத்திரங்களைப் புகுத்தி இங்கே
பொது மக்கள் தமக்கிடையில் போருண்டாக்கி
வருந்தாமல் வாழுகின்ற வகையைத் தேடி
வாய்ச்சொல்லில் வீரரெனக் காட்டுகின்றார்.

(2) மெய்வருத்தம் இல்லாமல், வெயிலில் தங்கள்
மேனியினைக் காட்டாமல் வளமாய் வாழ்ந்து
தெய்வீகப் பிறவியினர் தாங்கள் என்றும்
திராவிடர்கள் அனைவோரும் அடிமை என்றும்
உய்வகையைக் காட்டுவது வேதம் என்றும்
உலகிலதற் கிணையில்லை எங்கும் என்றும்
பொய்யுரையில் பிரசாரம் செய்து கொண்டு
போட்டியின்றி இந்நாட்டில் திரிகின்றாரே.

(3) ஈ.வெ.ரா. தன்மான இயக்கத் தாலே
இந்நாட்டு மக்களைக் கண்விழிக்கச் செய்தார்
மாவீர உணர்ச்சியுடன் மக்கட் கேற்ற
மாண்புடைய சீர்திருத்தம் பலசெய்கின்றார்
நாவாரப் பொய்கூறி நாட்டை ஏய்க்கும்
நயவஞ்சப் பார்ப்பனீயம் நசுங்கச் செய்தார்
ஏவோரும் இப்போரும் இல்லா வண்ணம்
எல்லோரும் சமமாக இனிவாழ் வோமே.

(4) கட்டாயக் கல்வியின்றி இந்த நாட்டில்
கடுகளவும் முன்னேற்றம் கைகூடாது
தொட்டாலும் பாவம் எனக்கூறும் பேர்கள்
தொலையாமல் இந்நாடு முன்னேறாது
ஒட்டாரைப் பின்பற்றி வாழும் மாந்தர்
ஒழியாமல் இந்நாடு செழித்தோங்காது
பட்டாளம் போவோரைத் தடுத்து நிற்கும்
பாவிகளால் இந்நாடு முன்னேறாதே.

(5) ஒரு சாதிக்கொருநீதி கூறுகின்ற
ஒழுக்கமற்ற நூல்களெலாம் ஒழியவேண்டும்
ஒருசாரார் மற்றவரை அடக்கியாளும்
உரிமையெல்லாம் விரைவாக ஒழியவேண்டும்
அரசியலில் தொழிலாளர்க் குரிமை வேண்டும்
அவர்களுக்குப் பலசலுகை காட்டவேண்டும்
பெரியாரின் பெருமையினைப் பேசவேண்டும்
பிணிகளெலாம் இந்நாட்டில் ஒழியவேண்டும்

திருமணங்கள்

தகட்டூர்: 29-6-44-ம் தேதி தோழர் டி. வி. ராமசாமி தேவர் இல்லத்தில், தோழர்கள் ரெங்கையனுக்கும் தையநாயகிக்கும் தோழர் சாம்பசிவம் முயற்சியால் தோழர் டி. வி. வேதவனம் அவர்கள் தலைமையில் புரோகிதமொழிந்த திருமணம் நடந்தது.

* *

மேலசர்க்கண்டார் கோட்டை திராவிடர் உடற்பயிற்சிக் கழகத் தலைவர் தோழர் மா. துரைசாமி அவர்களுக்கும் அரவங்காடு தோழர் ஏ. மைக்கேல் அவர்கள் புதல்வி செல்வமேரிக்கும் 14-7-44-ம் தேதி பொன்மலையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இத்திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு', 'திராவிட நாடு' ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே 8 அணா நன்கொடையளிக்கப்பட்டது.

* *

இட்டக்குடி தோழர் ஆ. அம்பாயிரத்திற்கும் தோழர் ஆ. தனபாக்கியத்தம்மைக்கும் தோழர் ஊ. சக்கரபாணி முதலியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் கோ. குழந்தைவேலன், வே. ஆறுமுகம், மூ. கிருஷ்ணசாமி பிள்ளை, வேலாயுதம் பிள்ளை முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

பெண்ணாகடம்: 2-7-44-ஆம் தேதி பெருநிலக்கிழார் தோழர் இராமசாமி பிள்ளை அவர்கள் புதல்வன் தோழர் சிவப்பிரகாசன் அவர்களுக்கும் ஆலம்பாடி பெருநிலக்கிழார் தோழர் இராசரத்தினம் பிள்ளை அவர்கள் புதல்வி தோழர் திரிபுரசுந்தரி அவர்களுக்கும் ஆலம்பாடியில் திருமணம் சிறப்பாக நடந்தது. அவ்வமயம் பெண்ணாகடம் சிவகுருநாதன் கழகத்தாரால் ஓர் வாழ்த்துப்பா கொடுக்கப்பட்டது. மற்றும் பல அன்பர்களால் வாழ்த்துப் பாக்களும், வெள்ளிக் கிண்ணங்களும், புத்தகங்களும் அளிக்கப்பட்டன.

* *

திருச்சி: மார்க்கட் தோழர் ஆர். சின்னத்தம்பி அவர்களுக்கும் மாரியப்ப பிள்ளை மகள் தோழர் செங்களனி அம்மாளுக்கும் வழக்கறிஞர் தோழர் ஜெ. எஸ். ராமானுஜம் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் 22-6-44 ஆம் தேதி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஜெகநாதன், எஸ். பார்வதி, எஸ். சிவலிங்கம், முதலியோர் சீர்திருத்த மணம் என்பதுபற்றிப் பேசினர். 'குடி அரசு'க்கு நன்கொடை ஒரு ரூபாய் வழங்கப்பட்டது.

பொன்மலை திராவிட வாலிபர் கழகம்

27-7-44-ஆம் தேதி தோழர் எஸ். நடராஜன் தலைமையில் நடைபெற்ற இக்கழகக் கூட்டத்தில், இக்கழகத்திற்கு ஒரு நிலம் வாங்குவதென்றும், அந்நிலத்தை வாங்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. மற்றும் இக்கழகம் திராவிட இன எழுச்சிக்காக பாடுபடுவதென்றும் மாதா மாதம் அறிக்கைகள் வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1-8-44-ல் தோழர் நடராஜன் தலைமையில் நடைபெற்ற இக்கழக பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பராங்குசம், வி. எஸ். பெருமாள், திருச்சி டி. சே. சீனிவாசன் முதலியவர்கள் 'நமது நோக்கம்'' என்பது பற்றிப் பேசினார்கள்.

Edited Printed and Published by N Karivaradaswamy at the Tamilan Press, 4[illegible] Cutchery Street, Erode.

ரோஜா முத்தையா